

திண்டுக்கல் மாவட்டம் சித்தையன்கோட்டை பேரூராட்சியில் புதிய பயனியர் நிழற்குடையை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார். அருகில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ராஜா, தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொண்ணு முரளி, செயல் அலுவலர் ஜெயமாலு, ஒன்றிய செயலாளர் ராமன், பேரூர்கழக செயலாளர் சக்திவேல் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம் சத்திரம் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் (லிமிடெட்) திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் சார்பில் ஒரு மகளிர் விடியல் பயண புதிய பேருந்து மற்றும் நான்கு புதிய புறநகரப் பேருந்துகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், மாநகராட்சி துணை மேயர் திவ்யா, திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் சதீஷ்குமார், துணை மேலாளர்கள் த .சாமிநாதன், ரவி, போக்குவரத்து கழக பணியாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் ,உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரூர் மாவட்ட புதிய வேளாண் கல்லூரிக்கு

# ரூ.83 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தகவல்!

*கரூர், ஜூன் 16 -*

கரூர் மாவட்டம் வாங்கல் அரசு மேம்படுத்தப் பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் சமூக அளவிலான கருப்பை வாய், மார்பக மற்றும் வாய் புற்று நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் முன்னோடி திட்டத்தினை கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்எல்ஏ துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் முன்னிலை வைத்தார். அதன் பின்னர் செய்தியாளர்களுக்கு வி.செந்தில் பாலாஜி அளித்த பேட்டியில் கூறியதாவது:



மருத்துவம் கல்வி தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக விளங்கக் கூடிய வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மருத்துவ துறையில் புற்றுநோய் கண்டறிவதற்கான ஒரு சிறப்பு திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் செயல்படுத்தி வருகின்றனர்.

12 மாவட்டங்களில் கரூர் மாவட்டமும் ஒன்ற. இச்சிறப்பு திட்டத்தின் விரிவாக்கம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் ஆறு லட்சத்து 82 ஆயிரம் நபர்களுக்கு புற்றுநோய் கண்டறிவதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின் றன.

கரூர் மாவட்டம் புற்று நோய் இல்லாத மாவட்டமாக உருவாக்க கலெக்டர் தலைமையில் அனைத்து துறையினர் இணைந்து அதற்கான முன்னேற்பாடுகளை சிறப்பாக செய்திருக்கிறார்கள். முற்றிலும் இலவசமாக இந்த முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மேல்சிகிச்சைக்கும் தேவையான முழுமை யான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

கரூர் வேளாண்மை கல்லூரி தொடர்பாக ஆர்ப்பாட்டம் போராட்டம் என்று கூறுகின்றனர். உங்களுக்கு எல்லாம் தெரியும். தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கடந்த காலத்தில் இடம் இன்றி கட்டடம் இன்றி தொடங்கப்பட்டது. முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்த பிறகு தான் அந்த கல்லூரிக்கான இடத்தை தேர்வு செய்து கையகப்படுத்தி நிதி ஒதுக்கீடு செய்து கட்டிடப் பணிகள் சிறப்பாக நிறைவடைந்த முதல்வர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

ஏதோ அவர்கள் ஆட்சிக் காலத்தில் கரூருக்கு மருத்துவக் கல்லூரியை கொண்டு வந்தது போல பேசி இருக்கிறார்கள். அந்த திட்டம் யாரால் வந்தது எப்படி வந்தது?. யாரெல்லாம் தடுக்க முற்பட்டார்கள் என்பதெல்லாம் மக்களுக்கு தெரியும். நீதிமன்றம் வரை சென்று கொண்டுவரப்பட்டது. திண்டுக்கல் மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம் நாமக்கல் மாவட்டங்கள் இடையே போட்டி இருந்தது. அதையும் மீறி தொடர் முயற்சிகளுக்கு பின்னர் தான் அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை அமைக்கப்பட்டது. அதற்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை செய்யப்பட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழி காட்டுதலோடு முதல் முறையாக பட்டங்களை வழங்கிய போது நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அரசு வேளாண்மை கல்லூரிக்கு இடம் தேர்வு செய்யப்பட்டு ஆட்சித் தலைவரால் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. ரூ. 7 கோடி மதிப்பீட்டில் துறைகளினுடைய இடங்களை ஆர்ஜிதம் செய்த வகை மாற்றம் செய்யப் பட இருக்கிறது. ஒப்புதல் கிடைத்தவுடன் 76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேளாண்மை கல்லூரிக்கு புதிய கட்டிடம் கட்டப் பட இருக்கிறது.

மாடு நாங்கள் வாங்கி விட்டோம். பால் கறக்க சொம்பு வாங்க முடியாதா ?. அதை வளர்க்க எங்களால் மறக்க முடியாதா? தாங்கள் செய்யாத ஒன்றை செய்தது போல காட்ட முயற்சிக் கிறார்கள் அது எடுடாது. திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு அறிவிக்கப்பட்ட மூன்று வேளாண். கல்லூரியில் ஒரு கல்லூரியை கரூர் மாவட்டத்திற்கு வழங்கியது முதலமைச்சர் அவர்கள். இதெல்லாம் தெரிந்தும் இவர்களின் இயலாமையை மறைப்பதற்காக ஒரு தவறான கருத்தை பரப்பி வருகின்றனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் நிதியை கொடுத்து இடத்தையும் கொடுத்துள்ளார்கள். விரைவில் வேளாண் கல்லூரி கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற இருக்கிறது.

மொத்தம் ரூ.83 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்ட வேளாண் அரசு கல்லூரி அமைய இருக்கிறது. இதற்கு காரணம் முதலமைச்சர் அவர்கள் தான்.

வளர்ச்சி பணிகளை தடுத்தவர்கள் தான் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கரூர் புதிய பேருந்து நிலையம் அமைக்க கூடாது என கோர்ட்டுக்கு சென்று தடை வாங்கினார்கள். மாணவர்கள் கல்வியிலும் தடை போட்டார்கள். உயர்கல்வி பயிலும் மாணவர்கள் போட்டி தேர்வுக்கு செல்லும் மாணவர்கள் பயில்வதற்காக பிரத்தியேகமாக நூலகம் கட்டும் பணிக்கு தடையாக இருந்தார்கள். எந்த திட்டத்தை கொண்டு வந்தாலும் தடுப்பதற்கான முயற்சியில் தொடர்ந்து செய்து வருகிறார்கள். சட்ட போராட்டம் நடத்தி அதில் வென்று திட்டங்களை செயல்படுத்துவது இந்த அரசு . தங்கள் ஆட்சியில் எதையும் செய்வதில்லை அடுத்தவர்கள் செய்வதையும் செய்ய விடுவதில்லை. எடப்பாடி ஆட்சியில் நிறைவேற்றியதாக ஒரு திட்டத்தை அவர்களால் கூற முடியாது.

திட்டங்களை கொண்டு வருவதும் இல்லை. கோர்ட்டுக்கு சென்று தடை வாங்குவது. அதன் பிறகு திட்டங்களை ஏன் கொண்டுவரவில்லை என கேட்டு போராட்டம் நடத்துவது. இவர்கள் எண்ணம் ஒருபோதும் ஈடேறாது. மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். 40 ஏக்கர் பரப்பளப்பில் புதிய வேளாண் கல்லூரி அமைய இருக்கிறது மாணவர்களுக்கு தரமான கல்வியை கொடுக்கக் கூடிய அளவிற்கு புதிய கல்லூரி அமையும் விரைவில் முதல்வர் அவர்களது போர்க்களங்களால் பணிகள் தொடங்கி வைக்கப்படும். இவ்வாறு வி. செந்தில் பாலாஜி கூறினார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கி ஒன்றிய-நகர-பகுதி-பேரூர்களில் தெருமுனைக் கூட்டங்கள்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

திருச்சியில் நடைபெற்ற கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு, அனைத்து ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன.

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் இக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறும், அதற்கு மாவட்ட–மாநகர–ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் கழகச்செயலாளர்கள் ஒத்துழைப்பு நல்குமாறும், இக்கூட்டங்கள் சிறப்பாக நடைபெறுவதை மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட–மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உறுதி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14-06-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


## நீர்வளத்துறை அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் வரவேற்புரை!

# நிலையான நீர்வள மேலாண்மைக்கான மக்கள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி!

## தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம் துவக்கி வைத்து உரையாற்றினார்!

*சென்னை, ஜூன் 16-*

தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறையின் சார்பில், நேற்று முன்தினம் (14.06.2025) நீர்நிலைகள் புத்துயிர் பெறுவது மற்றும் நீர்த்தேவையில் தன்னிறைவு பெறுவதின் அவசியத்தை உணர்த்தும் பொருட்டு "நிலையான நீர்வள மேலாண்மைக்கான மக்கள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி" என்ற தலைப்பில் பயிலரங்கம் சென்னை எழும்பூரில் உள்ள ரேடிஷன் ப்ளூவில் நடைபெற்றது. இப்பயிலரங்கத்தில் தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை , சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, பங்குதாரர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இப்பயிலரங்கத்தில் பங்கேற்ற பிரதிநிதிகளை வரவேற்று உரையாற்றிய நீர்வளத் துறை அரசுச் செயலாளர், ஜெ.ஜெயகாந்தன், நீர்நிலைகளைப் புத்துயிர் பெறச் செய்வதில் சமூகப் பங்களிப்பின் அவசியத்தை குறித்தும் முக்கியத்துவத்தை குறித்தும் வலியுறுத்தினார்.

பயிலரங்கத்தை துவக்கி வைத்து உரையாற்றிய தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம், இன்றைய நிலையில் தமிழ்நாடு 65 சதவிகிதம் நகரமயமாக்கலில் உள்ளது ஆகையால் மாநிலத்தின் நீர்நிலைகளை சரியான முறையில் பராமரிப்பதின் மூலம், தேவையான நீரை சேகரிக்கவும் வெள்ளத்தை கட்டுப்படுத்தவும் பயன்படும் என்றும், இப்பணிகளை மக்கள் ஒருங்கிணைப்போடு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

சிறப்பு விருண செயலர் விஜய் டியோராஜ், மகாராஷ்டிரா மாநிலத்தில் மக்கள் பங்களிப்போடு செயல்படுத்தப்பட்டு வரும் நீர்நிலைகள் மேம்படுத்தும் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர், டி.கார்த்திகேயன், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பி.அமுதா மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் தலைமையில், சமூக பங்களிப்புடன் நீர்நிலைகளைப் புனரமைப்பது தொடர்பான பல்வேறு தலைப்புகளில் குழு விவாதங்களும் நடத்தப்பட்டன.

நீர்நிலைகளைப் புத்துயிர் பெறுவதற்கான பயிலரங்கை முன்னெடுத்துச் செல்ல ஆக்கப்பூர்வமான வழிமுறைகளை உருவாக்கி, மக்கள் பங்களிப்புடன் பொது-தனியார் கூட்டமைப்பின் மூலம் நீர்நிலை களை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த நிதித்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் டி.உதயசந்திரன் வலியுறுத்தினார்.

மேலும், இப்பயிலரங்கத்தில் திருமதி சுப்ரியா சாகு, கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சிப்காட் மேலாண் இயக்குநர் கே.செந்தில்ராஜ், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாச ஆர்.ரெட்டி, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை ஆணையர் பி.பொன்னையா, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை கூடுதல் இயக்குநர் கே. அருண்மணி, மத்திய நிலத்தடி நீர் வாரியத்தின் சென்னை மண்டல இயக்குநர் ஆர்.சிவக்குமார், சென்னை நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் திருமதி ஜானகி, இணைத் தலைமைப் பொறியாளர் பொதுப்பணி திலகம் உள்ளிட்ட உயர் அலுவலர்கள், ஐ.ஐ.டி. மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தை சார்ந்த கல்வியாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகளான ஸ்வரன்சிங்., இ.ஆ.ப., (ஓய்வு) / தலைவர், TVS SST, அருண் கிருஷ்ணமூர்த்தி, EFI, நிமல் ராகவன், MEGA Foundations, செந்தூர் பாரி, ExNoRa Intl. Foundation, சி.சின்னசாமி, Siruthuli, சக்திவேல் பீமராஜா, Ramco Community Services, சுப்பிரமணியன், SPIC Ltd., வெங்கடேசன், DHAN Foundations, ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக, நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.இரமேஷ் அவர்களின் நன்றியுரையுடன் பயிலரங்கு இனிதே நிறைவடைந்தது.



தேனி தெற்கு மாவட்ட துணை செயலாளர்செந்தில்குமார் இல்ல மணவிழாவில் கலந்துகொண்டு மணமக்கள் அபினேஷ் பாண்டியன் – தீபிகா ஆகியோர்களை தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., மகராசன் எம்.எல்.ஏ. மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.



நாகை மாவட்டம் நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் நாகை தெற்கு ஒன்றியத்திற்கு புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் தலைமை செயற்குழு உறுப்பினரும் ஒன்றிய செயலாளர் க.இ.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டேனியல் சத்தியா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.கணேஷ்குமார் மற்றும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நெ.குணாநிதி, மூ.அன்புராஜ், ம.சபரிகிருஷ்ணன், கி.மோகன், கே.எஸ்.பாரதி, தி.சிவசுந்தரம், ம.விஜயகுமார், இரா.ஆனந்தராம் ஆகியோர் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாளை முன்னிட்டு இராசிபுரம் நகர கழக செயலாளர் என்.ஆர்.சங்கர் தலைமையில், இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர் முன்னிலையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் ஏற்பாட்டில் ராசிபுரம் புதிய பஸ் நிலையம் அருகே 500 பேருக்கு சர்க்கரைப் பொங்கல், தக்காளி சாதம், புளி சாதம் அன்னதானம் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச நோட்டு புத்தகம், பேனா வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இளைஞரணி அமைப்பாளர் யோகராஜன் மற்றும் நகர இளைஞரணி அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.